

ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யர்.

# ஆர்யதர்மம்.

புத். 3.

ஸஞ். 1.

பிங்கள௵ வைசாக சுத்தபஞ்சமி.


## ஆர்யதர்மம்.

இவ்வுலகில் ஆங்காங்கு அந்தந்த தேசபாஷையில் பற்பல பத்திரிகைகள் உல்லாஸத்துடன் சஞ்சரித்தபோதிலும் ஆர்யதர்மாபிமானிகள் ஆகிய ஆஸ்திகவைதிகர்களுக்கு ஆதரிக்கக்கூடிய இம்மை, மறுமை எனப்படும் இருவகைப் பயனையும், அதையடைய சுலபமான நன்னெறியைப் போதிக்கும் திறமை பொருந்திய பத்திரிகை மிகவரிதாயிருக்கின்றது. பின்னும் மிகச்சிறந்ததாயும் என்றும் அழிவில்லாத நித்தியஸுகஸ்வரூபமான மோக்ஷ

மென்கிற பரம புருஷார்த்தத்திற்குச் சமானமான சாஸ்தி
ரீயமான தர்மங்களையனுஷ்டித்து ஜன்ம சாபல்யத்தை
செய்து கொள்வதே இம்மானிடப் பிறவிக்கு முக்கியமான
பயனென்றுணர்ந்து அவைகளை எல்லா ஜனங்களுக்கும்
எளிதில் நம் தேசபாஷையிலறிவிக்கவேண்டி. முன் வந்
திருக்கும் ஆர்யதர்மம் என்கிற இப்பத்திரிகையானது தற்
காலத்தில் ஏற்பட்டிருக்கும் தர்மக் குறைவை நிவர்த்தி
செய்து நம்போன்றவர்களையும் அனுக்கிரஹிக்கவேண்டி
ஆதியிலவதரித்த பரமசிவாம்சபூதர்களான ஸ்ரீ சங்கர
பகவத்பாதாசார்ய ஸ்வாமிகளே 'यदा यदा हि धर्मस्य'
என்கிற ஸ்ரீ கீதா சாஸ்திரத்தின் கருத்துக்கிணங்க மறு
படியுமிவ்வுருவாய்த்தோன்றியிருக்கிறார்களென்று சான்
றோர்களுள்ளத்திலுதித்திருக்குமானந்த வெள்ளத்திற்குக்
காரணபூதர்களாயும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
களாய் கும்பகோணத்தின்கண் விளங்கும் ஸ்ரீ ஜகத்குரு
சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய அனுக்கிரஹ விசேஷத்
தாலும் தர்ம கார்யங்களுடைய அபிவிருத்திக்கு முக்கிய
காரணமான ஸ்ரீ ஜகதீசுவரருடைய பூர்ணமான கருணையா
லும் சென்ற ராக்ஷஸ வருஷத்திய ஸ்ரீசங்கரஜயந்தீ மகோ
த்ஸவ புண்ய காலத்தில் ஜன்மாவையடைந்து லோகோப
காரத்தையே பெரிதாய்க்கொண்ட ஸாதுக்களவதரித்த
புண்ய காலத்திலிப் பத்திரிகையும் ஜனித்தபடியால் அவர்
களைப்போல் சிறந்த பதநடைகளாலும் அமுதத்தினுடைய
ருசியைப்பழிக்குமழகிய மொழிகளாலும் சண்பக மலரொ
ளியையொளிக்கும் திருமேனியாலும் அலங்கரிக்கப்பட்ட
தாய்க்கொண்டு அந்தந்த அதிகாரிகளுக்குசிதமாய்
சுருதி, ஸ்மிருதி, புராணம், சிஷ்டாசாரம் முதலிய வைதிக
வழிகளிலிருந்தும் நழுவாமல் ஸகல சிரேயஸ்ஸுக்கும்
ஸாதனமான பொது தர்மங்களையும் விசேஷதர்மங்களையும்
சுலபமாய் போதித்துப் பார்க்கும் ஜனங்களுக்கு அதிகமான

சந்தோஷத்தையுண்டுபண்ணிக் கொண்டுவருகிறதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். இதுவரையில் மிகவும் இளவயதிலிருந்தபடியால் தன் இஷ்டத்தை ஸ்பஷ்டமாய் சிஷ்ட ஜனங்களனைவர்களிடமும் அறிவிப்பதற்கும் தயங்காமல் எங்கும்யோங்கி ஸஞ்சரிப்பதற்கும் கொஞ்சம் ஸங்கோசத்தையடைந்து தனக்குப் பழக்கமுள்ளவிடங்களில் மாத்திரம் விளையாடிக்கொண்டிருந்தது. இனி மூன்றாவதாண்டு பிறந்து விட்டபடியால் இதற்கு முன்னிருந்த அற்பசங்கோசத்தையும் விட்டுவிட்டு உல்லாஸமாய் தன்னிடத்தில் அன்பு பாராட்டும் ஆஸ்திகசிகாமணிகளனைவர்களிடமும் சந்தோஷத்துடன் சென்று தன் கருத்தையவர்களிடம் நன்கு வெளியிடும்பொருட்டுப் பலவிடங்களிலும் பிரகாசிக்குமென்பது திண்ணம்.

இவ்விதம் காலதோஷத்தால் ஜகத்திற்கு நேர்ந்திருக்கும் அஜ்ஞானமாகிற இருளை விலக்க வெளிவந்த கதிரொளியோ, ஆர்யமதாபிமானிகளாகிய ஆஸ்திகர்களுடைய பாக்கிய பரம்பரையோ, ஸ்ரீ ஜகத்குருபரமாசார்யரவர்களுடைய திவ்ய அனுக்கிரகமோ, நமது ஸநாதனதர்மங்களுக்கியற்கையாயிருக்கும் மகிமையின் பெருமையோ வெனப்பலவாறாய் பெரியோர்களால் புகழக்கூடிய பெருமைவாய்ந்த இப்பத்திரிகையானது தேசமெங்கும் நன்றாய்ப் பரவிச்செழித்தோங்கி வளர்ந்து தன் பெயரை சீக்கிரம் அனுஷ்டானத்தாலும் ஜகத்தில் ஸ்தாபிக்கும்படி செய்யவேண்டுமென்று கருணாநிதியாகிய ஸ்ரீ சந்திரமௌளீசுவரனையும் ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத்பாதாசார்ய ஸ்வாமிகளவர்களையும் அனேகவந்தன பூர்வகமாய் பிரார்த்திக்கின்றோம்.

---

# ஆர்யதர்ம பத்திரிகை.

இப்பத்திரிகை இதுபரியந்தம் வெளிவராதததாயும் அபூர்வமாயும் இந்துக்களுக்கு அத்தியாவசியகமான விஷயங்களால் அலங்கரிக்கப் பெற்றதாயும் கொஞ்சகாலமாய்ப் பிரசாரமாய்க் கொண்டு வருவதும், கும்பகோணத்தில் ஸ்ரீமடத்தில் விளங்கும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் சிஷ்ய முகமாக லோகோபகாரத்தின்பொருட்டு இப்பத்திரிகையைப் பிரசாரம்செய்து தர்ம தத்துவங்களை ஸகல ஜனங்களும் அறியும்படி செய்யவேண்டுமென்று தாத்பரியம் கொண்டிருக்கிறார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயமே. பிராணிகளை ஸம்ஸார ஸாகரத்தினின்றும் உத்தாரம் செய்வதற்காகவே ஈசுவரப் பிரேரணையால் வித்தியா ஸந்ததி என்று அநாதி காலமாய் வளர்ந்தோங்கிய ஆசாரிய பரம்பரையில் நாயகமணிபோல் விளங்கும் நமது ஆசாரிய ஸ்வாமிகள் இவ்விஷயத்திற் பிரவிருத்தித்தது ஆச்சரியமன்று. வைதிக மார்க்க ஸ்தாபனமன்றோ அப்பரம்பரையின் முக்கியமான காரியம்.

आचिनोति हि शास्त्रार्थमाचारे स्थापयत्यपि ।
स्वयमाचरते यस्मात्तस्मादाचार्य उच्यते ॥

என்று சொன்ன பிரகாரம் கலியினால் கலக்கமுற்ற இக்காலத்தில் உதர போஷணார்த்தமாக விதி-நிஷேதங்களையறியாமல் பற்பல வியாபாரங்களிற் புகுந்தவர்களும் தமக்கு சிரேயஸ் இன்னதென்று அறியாதவர்களுமான சிஷ்ய ஜனங்களுக்கு அவரவர்களின் அதிகாரத்திற்குத் தக்கவாறு சாஸ்திரார்த்தங்களைத் திரட்டி பத்திரிகை மூலமாகவும் சிஷ்ய முகமாகவும் நேரிலும் உபதேசம் செய்யக்

கருணை பூண்டிருப்பது நமது பாக்கியமே. இவ்விஷயத்தை "உபதேசஸாஹஸ்ரீ" என்கிற நூலில்

विद्यासंततिर्हि प्राण्यनुग्रहाय भवति नौरिव नदीं तितीर्षोः।

என்று பகவத்பாதாள் நிரூபித்திருக்கின்றார்கள். பத்திரிகையின் பெயரினாலேயே பத்திரிகையின் உபதேசம் தெளிவாகத் தெரிகின்றது. முன் சிரத்தை, பக்தி முதலான குணங்கள் மேலிட்டிருந்த சமயத்தில் ஜனங்கள் சுயமாகவே ஆசாரியாளைத் தேடி வெகு காலம் சுசுரூஷை (தொண்டு) முதலியவற்றால் ஆசாரியப் பிரஸாதத்தையடைந்து கிருதார்த்தரானார்களென்று பெரியோர்களின் சரித்திரங்களால் அறியப்படுகிறது. பின்பு வரவர கால தோஷத்தால் அதர்மம் விருத்தியடைந்து ஸத்விஷயப் பிரவிருத்தி குறைந்திடவே தகுந்த குரு கிடைத்தால் நாம் தத்துவங்களைத் தெரிந்துகொண்டு அனுஷ்டிக்கலாமென்கிற எண்ணம் மாத்திரம் ஜனங்களிடத்திற் பரவியிருந்தது. அச்சமயம் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்ட மடங்களில் ஆசாரிய பதவியை வகித்துவந்த மகான்களால் தர்ம ஸ்தாபனங்கள் நடைபெற்று வந்தன. தற்காலத்திலோ கலியின் வலிமையால் ஜனங்களுக்கு அதர்மத்தில் விசேஷமான ருசியும், அதர்மத்தின்கண் தர்மமெனுந் தோற்றம் தர்மத்தினிடம் அதர்மமெனும் தோற்றம் என்று இத்தகைய விபரீத ஞானமும், ஆசாரியரிடத்தில் பக்தியின்மையும் ஆகிய இவ்வித அனர்த்த காரணங்கள் வெகுவாய் ஏற்பட்டுவிட்டன என்பதும் வெளிப்படையான விஷயம். ஆகையால் ஆசாரியாள் சிஷ்யர்களுக்குத் தாமாகவே வைதிக மார்க்கத்தையும், ஆசாரிய பக்தியின் மகிமையையும் உபதேசம் பண்ணும்படியான காலம் வந்துவிட்டது. ஒவ்வொரு தேசங்களிலும் ஒவ்வொரு நகரங்களிலும் ஒவ்வோர் கிராமங்களிலும் வசிக்கும் பற்பல அபிப்பிராயங்க

ளுள்ள ஜனங்களுக்கு சிரத்தையை உண்டுபண்ணக்கூடிய உபதேசங்களை நேரில் அடிக்கடி செய்வது அஸாத்தியமாகையால் காலோசிதமாய்த் தற்கால ஸ்திதியை அநுஸரித்து பத்திரிகை மூலமாய் உபதேசங்கள் செய்யப்படுவதுதான் உத்தமமென்று நமது ஆசாரியாளுடைய அபிப்ராயம். அதிலும் ஸம்ஸ்கிருத பாஷையை அறியாதவர்கள் ஏராளமாக இருப்பதால் தேச பாஷை மூலமாய் தர்ம தத்துவங்களை உபதேசிக்க நேர்ந்தது. தேச பாஷா பத்திரிகைகள் விசேஷமாய் நமது தேசத்தில் பிரசாரமடைந்து வந்தாலும் அவற்றில் தேச விருத்தாந்தங்களும் பல லௌகிகமான விஷயங்களும்தான் காணப்படுகின்றன. சில பத்திரிகைகளில் மத சம்பந்தமான விஷயங்கள் காணப்பட்டாலும் அவை சிறிதளவேயுள்ளனவாதலால் தற்கால நிலைமைக்கு அவைமாத்திரம் போதாதென்று நினைத்து பெரியோர்களுடைய ஸம்பிரதாய ஸித்தமான ஆசாரங்களுக்கும் சாஸ்திரத்திற்கும் ஒத்ததான மார்க்கத்தைக் கற்பிக்கும் இப்பத்திரிகை அவசியமேயாகும். இதில் பெரியோர்கள் சரித்திர மூலமாகவும் சாஸ்திர மூலமாகவும் யுக்தியினாலும் விஷயங்களை நிரூபிப்பதால் எல்லா ஜனங்களுக்கும் நாளுக்குநாள் சிரத்தை விசுவாஸம் பெருகி ஈசுவர அநுக்கிரகத்தாலும் ஆசாரியப் பிரஸாதத்தாலும் பத்திரிகையின் உத்தேசம் சித்திக்குமென்று நம்பப்படுகிறது.

யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள்.

---

# ஸ்ரீ சங்கராப்யுதயத்தில் சொல்லப்பட்ட ஸ்ரீ ஜகத்குருபரமாசார்யாவர்களின் அவதாரச்சுருக்கம்.

केरलेषु नभोलङ्घिकेरभूरुहशालिषु ।
अस्ति कश्चिन्महानग्रहारः कालटिनामकः ॥ १ ॥

ஆகாயத்தையளாவி நிற்கும் தென்னமரங்களால் விளங்கும் கேரள தேசங்களில் காலடி என்று பெயர்பூண்ட சிறந்தவோர் அக்கிரகாரமிருக்கின்றது.

विद्याधिराज इत्यस्मिन्विश्रुतान्वर्थनामकः ।
विपश्चितामग्रगण्यो व्याकुर्वाणो विदिद्युते ॥ २ ॥

இந்த அக்கிரஹாரத்தில் பிரஸித்தராயும் வித்தியாதிராஜரென்கிற காரணப்பெயரை வகித்தவராயும் கற்றோர்கட்கு முதன்மையாய்க் கூறத் தகுந்தவருமானவோர் அந்தணர் சாஸ்திரார்த்த விசாரம் செய்துகொண்டிருந்தார்.

तस्य नाम्ना शिवगुरुस्तनयो विनयोज्वलः ।
महितोऽजनि यत्पत्नी मखपण्डितकन्यका ॥ ३ ॥

இந்த வித்யாதிராஜருக்கு விநயம் முதலிய நற்குணங்களோடுக் கூடியவரான சிவகுருவென்கிற சிரேஷ்டரான ஒரு புத்திரருண்டானார். அவர் மகபண்டிதருடைய கன்னிகையைப் பார்யையாக அடைந்தார்.

अध्यैष्ट चतुरो वेदानयष्ट स महाध्वरैः ।
अलब्ध निखिलान्कामानन्तरेण सुतोदयम् ॥ ४ ॥

சிவகுருவென்கிற அம்மகான் நான்கு மறைகளையும் நன் கறிந்தார். உத்தமமான யாகங்களைச் செய்து விண்ணவர் களுக்குத் திருப்தியையுண்டுபண்ணினார். புத்திரபாக்ய மென்கிற ஒன்றைத்தவிர மற்றச்சகல பாக்கியங்களையு மடைந்தார்.

ततः स तनयाकांक्षी तरुणीसचिवश्चिरम् ।
तपसा तोषयामास तरुणेन्दुशिखामणिम् ॥ ५ ॥

இவ்விதம் கொஞ்ச காலம் சென்ற பிறகு புத்ரனை யடைய வேண்டுமென்றுவல்கொண்ட அந்தச் சிவகுருவானவர் தருணியாயிருக்கும் தன் பத்னியுடன் கூடச்செய்யப் பட்ட தம் தவத்தால் பால சந்திரனைச் சிரோரத்னமா யுடைய பரமேசுவரனைச் சந்தோஷிக்கச் செய்தார்.

सामि नीलवपुः साक्षाद्यामिनी तिलकेश्वरः ।
वाचमूचे प्रसन्नात्मा वाञ्छिताधिकदायिनीम् ॥ ६ ॥

தம் சரீரத்தில் விளங்கும் பார்வதிதேவியால் கருப்பான பாதி சரீரத்தையுடையவராயும் சந்திரசேகரருமான ஈசன் மிகவும் பிரஸன்னராய்க்கொண்டு விரும்பியதைக் காட்டி லுமதிகம் கொடுக்கிறதான வசனத்தால் அடியில் வரு மாறு தெரிவித்தார்.

वरयस्व बहून्पुत्रान्वत्स मूढांश्चिरायुषः ।
सर्वज्ञमेकमथवा सौम्य संकुचितायुषम् ॥ ७ ॥

"உத்தம குணங்களால் புகழத்தகுந்த ஹே-குழந்தாய், அதிக ஆயுளையுடைய அறிவீனர்களான அநேக புத்ரர் கள் வேண்டுமா? இல்லாவிடில் அற்ப ஆயுளையுடைய அறிவிற் சிறந்த ஓர் மைந்தனை விரும்புகிறாயா? உன் இஷ்டத்தைக் கூறுவாயாக" என்று வினவினர்.

संमन्त्र्य प्रियया तेन सर्वज्ञे तनये वृते ।
अन्तर्धिमतानिष्टासावनन्तर्धिकरो विभुः ॥ ८ ॥

தம் பார்யையுடன் ஆலோசித்துக்கொண்டு-ஸர்வக்ஞனை புத்திரனை வேண்டுமென்று அந்தச் சிவகுரு பிரார்த்திக்குங்கால் எவ்வித ஐசுவரியத்தையும் அளிக்கச் சக்தராயும் வியாபகராயுமிருக்கும் அந்த ஈசுவரன் இவர்வேண்டிய படியே வரத்தைக் கொடுத்துத் தாமும் மறைந்தார்.

आकुलं जगदुद्धर्तुमद्वैतपरिपन्थिभिः ।
जठरं तद्विलासिन्या जगदीशोऽभजत्स्वयम् ॥ ९ ॥

உடனே அத்வைதமதத்திற்கு விரோதிகளாயிருக்கும் சத்துருக்களால் பீடிக்கப்பட்ட இந்த ஜகத்தை நன்னெறியில் நிறுத்தவேண்டி ஜகதீசுவரனான பரமசிவனே அந்தச் சிவகுருவின் பார்யையினுடைய உதரத்தில் பிரவேசித்தார்.

शुभंयुनि दिने सूनुमहंयुकुमतासहम् ।
प्रासूत गुहमात्रे सा सासूयेव शुचिस्मिता ॥ १० ॥

சுத்தமான மந்தஹாஸத்தையுடைய பூர்ண கர்ப்பத்தோடு கூடிய அச்சிவகுருவின் பத்நியானவள் அகங்காரத்தோடு கூடிய குமதஸ்தர்களை ஸகிக்காதவனான புத்ரனை மிகவும் சிறந்ததான புண்ய தினத்தில் சுப்பிரமண்யருக்குத் தாயாரான பார்வதியினிடத்தில் அசூயையுள்ளவள் போல் உண்டுபண்ணினாள்.

दिग्भिः प्रसेदे पवनैर्दिव्यगन्धैरभूयत ।
प्रदक्षिणीभवज्ज्वालैर्जज्वले ज्वलनैरपि ॥ ११ ॥

இக்குழந்தை உற்பத்தியான ஸமயத்தில் திக்குகள் தெளிவாயிருந்தன. வாயுவானவன் நல்ல கந்தங்களுடன் வீசினான். பிரதக்ஷிணமாய் ஜ்வலிக்கும் ஜ்வாலைகளுடன் கூட அக்னியும் பிரகாசித்தது.

ततः शिवगुरुः स्नातो धवलाम्बरसंवृतः ।
वित्तेशमधरीकुर्वन्दत्ते स्म विविधं धनम् ॥ १२ ॥

உடனே ஐசுவர்யத்தால் குபேரனுக்கு மேற்பட்டவரான அந்தச் சிவகுருவானவர் ஸ்நானம்செய்து சுத்த வஸ்திரம் தரித்துக்கொண்டு அநேக திரவ்யங்களைத் தானம் செய்தார்.

पुरोधसं पुरस्कृत्य पुण्याहविधिपूर्वकम् ।
चकार स विधानज्ञो जातकर्मादिमाः क्रियाः ॥ १३ ॥

பிறகு உபாத்தியாயரை முன்னிட்டுப் புண்யாகவாசனம் முதலிய கர்மங்களைச் செய்து சாஸ்திரானுஸாரமாய் ஜாதகர்ம முதலிய கிரியைகளையும் நடத்தினார்.

अर्धेन्दुशेखरस्यायमवतारममुं विदन् ।
शंकरं जगतां चक्रे शंकरं नामतोऽपि सः ॥ १४ ॥

தன் புத்திரனை அந்தச் சிவகுருவானவர் சந்திரகலையைச் சிரோபூஷணமாக உடைய பரமேசுவரனுடைய அவதாரமென்றறிந்து ஜகத்துக்களுக்குச் சுகத்தைக் கொடுக்கக்கூடியதான சங்கரன் என்னும் பெயரையே அவருக்கேற்படுத்தினார்.

पद्भ्यां संताडयन्नेष पर्यङ्कफलकं शनैः ।
बिभेद शतधा सद्यो भेदवादिमनोरथान् ॥ १५ ॥

இந்தச் சங்கரரானவர் தம் கால்களால் கட்டில்களின் பலகைகளை உதைப்பதினால் பேதவாதிகளுடைய மனோரதத்தை அநேகம் விதமாகப் பேதித்தார்.

द्वित्रान्वर्णान्वदत्यस्मिन्द्वैतिनो मौनिनोऽभवन् ।
पद्भ्यां संचरमाणे तु पलायन्त दिशो दश ॥ १६ ॥

இவருக்கு இரண்டு மூன்றெழுத்துகள் சேர்த்து பேசும் திறமை வந்தவுடன் த்வைதவாதிகள் மௌனிகளாக ஆய்விட்டார்கள். கால்களால் நடக்க ஆரம்பித்தவுடன் பத்துத்திக்குகளிலும் அவர்கள் ஓடி ஒளித்துக்கொண்டார்கள்.

आक्षपादमुखान्ग्रन्थानार्हतायागमांनपि ।
पपाठ सुनिरासाय प्रागेवोपनयादसौ ॥ १७ ॥

பின்னும் இவர் உபநயனமாவதற்கு முந்தியே துர்மதங்களைப் பிறகு நன்ருய்க் கண்டனம் செய்வதற்காக கௌதமர் முதலிய மகரிஷிகளால் செய்யப்பட்ட கிரந்தங்களையும் பௌத்தன் முதலானவர்களுடைய ஆகமங்களையும் படித்தார்.

अक्लृप्तोपनयं ताते हन्त दिष्टगतिं गते ।
उपषष्टं वयस्येष उपानीयत बन्धुभिः ॥ १८ ॥

ஐந்தாவது ஆண்டு பிறந்தவுடன் இவர் தந்தையான சிவகுருவானவர் உபநயனம் என்னும் கர்மாவைச் செய்யாமல் லோகாந்தரம் சென்றுவிட்டபடியால் அந்த ஐந்தாவது வயதிலேயே பந்து ஜனங்களால் இவருக்கு உபநயனம் செய்து வைக்கப்பட்டது.

अधीत्य चतुरो वेदानङ्गषट्कोपबृंहितान् ।
अरंस्त जैमिनीयेऽध्वन्यधियोगमजागरीत् ॥ १९ ॥

உபநயனம் செய்யப்பட்ட பிறகு சங்கராசாரியரவர்கள் ஆறு அங்கங்களோடு நான்கு மறைகளையும் நன்கு அத்யயனம் செய்து பிறகு ஜைமுனி மகரிஷியினுல் செய்யப்பட்ட மீமாம்சா சாஸ்திரத்திலும் யோக சாஸ்திரத்திலும் விசேஷமான பாண்டித்தியத்தை யடைந்தார்.

इतिहासपुराणादीनीक्षमाणः स्मृतीरपि ।
सर्वज्ञपदवीं लेभे सप्तमे हायने वटुः ॥ २० ॥

பிறகு இதிகாசம் புராணம் ஸ்மிருதி முதலிய ஸகல கிரந்தங்களிலும் அதிகமான க்ஞான வலிமையையடைந்து எழாம் ஆண்டில் வடுவாயிருக்கும் நமது ஆசார்யாள் ஸர்வக்ஞரென்று எல்லோராலும் புகழக்கூடிய ஒருபிருதை யடைந்தார்.

अधीतमखिलं शास्त्रमालोच्य स पुनः पुनः ।
व्याख्याय सौख्यभरितान्विधेयान्विदधेतमाम् ॥ २१ ॥

இவ்விதம் தம்மால் அத்தியயனம் பண்ணப்பட்ட ஸகல சாஸ்திரார்த்தங்களையும் அடிக்கடி நன்கு விசாரித்து சௌக்கியத்தைக் கொடுக்கக்கூடியதாயும் சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டதாயுமிருக்கும் கர்மாக்களைத் தெரிந்து கொண்டு சாஸ்திரத்தில் கூறியவாறு சகல கர்மாக்களையும் அவர்கள் நன்கு அனுஷ்டிக்கார்கள்.

राजशेखरनामाथ राजा तं द्विजशेखरम् ।
स्वभ्यर्च्य श्रावयामास स्वकृतं नाटकत्रयम् ॥ २२ ॥

இவ்விதமிருக்கும் ஸமயத்தில் ராஜசேகரனென்னும் ஓர் அரசன் அந்தண குலத்திற் சிறந்த சிரோமணியாய் விளங்கும் அவர்களைப் பக்திசிரத்தையுடன் பூஜித்து தன்னால் செய்யப்பட்ட மூன்று நாடகங்களையும் கேட்கும்படி வேண்டினான்.

अनुजज्ञे गृहान्गन्तुमभिनन्द्य जनाधिपम् ।
दृशापि नास्पृशत्तेन दत्तानि द्रविणानि सः ॥ २३ ॥

அவர்களும் அவைகளைக் கேட்டு அபிநந்தித்து ராஜாவைக் கிரகத்திற்குப் போகும்படி உத்தரவு கொடுத்தார்கள். அந்த அரசனால் சந்தோஷித்து அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட திரவ்யத்தை நேத்திரத்தால்கூட இவர் பார்க்கவில்லை.

निरीक्ष्य मातरं मन्त्रितुं निम्नगां गन्तुमक्षमाम् ।
निर्ममे योगशक्त्यासौ निष्कुटेम्बाभिधां नदीम् ॥ २४ ॥

தம் மாதா முதிர்ந்த வயதிலிருந்தபடியால் கிரகத்திற்குக் கொஞ்ச தூரத்திலிருந்த நதிக்கு ஸ்நாநத்திற்குப் போவதற்குச் சிரமப்படுகிறாள் என்பதையறிந்து தம் யோக சக்தியால் வீட்டுக் கொல்லையில் அம்பாவென்று பெயர் கொண்ட நதியை உண்டுபண்ணினார்.

तत्तटे भवनं शौरेस्तरङ्गाहतिभङ्गुरम् ।
उद्धृत्य नातिदूरेऽथ योगशक्त्या चकार सः ॥ २५ ॥

அந்த நதிக்கரையிலிருந்ததாயும் அந்நதி பிரவாகத்தால் அடிக்கப்பட்டு ஜீர்ணமாயுமிருந்த விஷ்ணு ஆலயத்தை தம் யோக சக்தியால் அவ்விடமிருந்து உத்தாரணம் செய்து தம் கிரகத்திற்கு ஸமீபத்தில் ப்ரதிஷ்டை செய்தார்.

ततः शुद्धाष्टम्यां तस्यां तटिन्यां मज्जनोन्मुखः ।
ग्राहेण साग्रहेणेष गृहीतचरणोऽभवत् ॥ २६ ॥

கொஞ்சகாலம் சென்ற பிறகு சுத்தாஷ்டமி தினத்தில் தமது க்ரகத்திற்கருகில் விளங்கும் நதியில் ஸ்நாநத்திற்காக இறங்கிய ஆசாரியாளை ஆக்ரகத்தோடு கூடிய ஓர் முதலையானது காலில் பிடித்துக்கொண்டது.

अवहारगृहीताङ्घ्रिरापद्यत्यन्तधीरधीः ।
अन्तिके स निमज्जन्तीमम्बामिदमवोचत ॥ २७ ॥

முதலையால் பிடிக்கப்பட்ட தம் சரணத்தையுடையவர்களாயும், ஆபத்காலத்திற்கூட மிகவும் தைரியத்துடன் விளங்கும் ஆசாரியாவர்கள் ஸமீபத்தில் ஸ்நானம் செய்து கொண்டிருக்கும் தம் அன்னையை நோக்கி அடியில் வருமாறு கூறினார்கள்.

नक्रोऽयं वक्रदंष्ट्रो मां नयत्यतिबलो जले ।
करवाणि किमम्बाहं कालो हि दुरतिक्रमः ॥ २८ ॥

"ஹே மாதாவே, குடிலமான தந்தத்தையுடையதாயும் மிகவும் பலசாலியாயுமிருக்கிற இந்த முதலையானது என்னை ஜலத்தில் இழுக்கின்றது. நான் என்ன செய்வேன். காலம் என்பது தாண்ட முடியாதல்லவா ?

अष्टमूर्तिरदाद्वा मां अष्टवर्षैकजीवनम् ।
विधिना विहितः कालो विषयोऽयमुपागतः ॥ २९ ॥

அஷ்டமூர்த்தியான பரமேசுவரன் எட்டு வயது ஆயுள் உள்ள என்னை உங்களுக்குக் கொடுத்தார். தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்ட கடூரமான அக்காலமானது இப்பொழுது வந்துவிட்டது," என்று தெரிவித்தார்.

पुत्रकृत्यमकृत्वा मे पुत्र यासि कथंन्विति ।
उच्चै रुदतीमेनामुवाच स पुनः पुनः ॥ ३० ॥

இவ்வசனத்தைச்செவியுற்ற அவர் மாதாவும் மிகுந்த துக்கத்துடன் புத்ரனைக் கூவி "எனக்குப் புத்ரனாகிய உன்னால் செய்யக்கூடிய கர்மாவைச்செய்யாமல் எப்படிப்போவாய்," என்று வாய்விட்டு அலறும் தம் மாதாவைப் பார்த்து வித்வானான ஆசாரியர் மறுபடியும் கூறுகின்றார்.

चतुर्थमाश्रमं प्राप्य जन्मान्तरतयोदितम् ।
पुत्रकृत्याय जीवामि पुनरष्टावहं समाः ॥ ३१ ॥

"ஹே மாதாவே, ஜன்மாந்தரமாகக் கூறப்பட்ட நான்காவதான ஸந்யாஸாச்ரமத்தை அடைந்தால் உனக்குப் புத்ரகிருத்தியம் செய்யவேண்டியதின்பொருட்டு மறுபடியும் நான் எட்டு வருஷம் உயிரோடிருப்பேன். உன் அனுமதிப்படி செய்கிறேன்" என்று சொன்னார்.

तया तथेत्यनुज्ञातः तपस्विन्या कथंचन ।
संन्यस्तोऽहमिति प्राह संनिरुध्येन्द्रियाणि सः ॥ ३२ ॥

இவ்வித வார்த்தைகளைக்கேட்டு மிகுந்த துக்கத்தையுடைய தம் தாயாரால் அதிக மனவருத்தத்துடன் 'அவ்விதமே செய்' என்று அனுக்ஞை கொடுக்கப்பட்ட ஆசாரியாள் இந்திரியங்களை யடக்கிக்கொண்டு 'நான் ஸன்னியஸ்தனாக ஆய்விட்டேன்' என்று சொன்னார்கள்.

ततो दिव्याम्बरधरस्तप्तचामीकरप्रभः ।
देवभूयंगतो नक्रो दिवि तिष्ठन्नवोचत ॥ ३३ ॥

இவ்விதம் அவர்கள் ஸந்யாஸம் செய்துகொண்ட பிறகு

அவர்கள் காலைப் பிடித்துக்கொண்டிருந்த முதலையானது சிறந்த ஆடையுடன் கூடியதாயும் உருக்கிவிட்ட ஸ்வர்ணம் போன்ற மேனியுடையதாயுமிருக்கும் தேவ பாவத்தை யடைந்து ஆகாயத்தில் நின்றுகொண்டு இவ்விதம் உரைத்தது.

तव प्रसादान्मुक्तोऽस्मि भारतीप्रियशापतः ।
क्षमस्व मन्तुमित्युक्त्वा क्षणादन्तरधत्त सः ॥ ३४ ॥

“உம்முடைய பிரசாதத்தால் பிர்ம்மாவினுடைய சாபத்திலிருந்தும் விடுபட்டவனாக ஆகிறேன். என்னால் தங்களுக்குச் செய்யப்பட்ட அபராதத்தைப் பொறுத்துக் கொள்ளவேணும்” என்று சொல்லிவிட்டு க்ஷண காலத்துக்குள் தேவபாவத்தை யடைந்த அந்த முதலையானது மறைந்துவிட்டது.

सान्त्वयन्जननीं काले संनिधानप्रतिज्ञया ।
पर्याप्तधैर्यः प्रसभं प्रवव्राज स शंकरः ॥ ३५ ॥

“உடனே உனக்கு சிரமம் நேரும் காலத்தில் நான் அவச்யம் உன் ஸமீபம் வந்து சேருகிறேன்” என்று பிரதிக்ஞை செய்து கொடுத்துத் தாயாரையும் ஸமாதானம் செய்து விட்டு ஆசாரியரவர்கள் பூர்ணமான தைர்யத்தை யடைந்தவர்களாய்க்கொண்டு சீக்கிரம் சாஸ்திரோக்தப் பிரகாரமாக ஸந்யாஸாசிரமத்தை ஸ்வீகரித்தார்கள்.

# ஸரஸ்வதீ மஹாலய ஸ்தாபநமும் அதன் பிரயோஜநமும்.

தஞ்சாவூர் ஸரஸ்வதீ மஹாலயம் நமது பரதகண்டத்தில் மட்டுமேயன்றி ஐரோப்பா அமெரிக்காக் கண்டங்களிலும் மிகவும் பிரஸித்திபெற்று, ஆங்குநின்றும் சுற்றுப் பிரயாணஞ்செய்து நமது பரதகண்டத்திற்கு வரும் கல்விமான்களாகியதேசயாத்திரிகர்கள் அனைவராலும் பார்வையிடப்பெற்று வியந்து கூறப்பட்டுளது. சுதேச அரசர்களாலாளப்பட்ட ஸம்ஸ்தானங்களினின்று வரும் யாத்திரிகர்கள் ஸரஸ்வதீ மஹாலயத்தைக் கண்ணுற்று மூக்கில் விரல்வைத்து அதிசயித்து, இத்தகையதோர் ஸரஸ்வதீ மஹாலயம் தமது ஸமஸ்தானங்களில் இற்றைக்குமில்லையெனப் பெருமூச்செரிந்து வாய்திறந்து கூறி, அதனை விட்டு நீங்க மனம் வராது திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு அடியளந்து செல்வதைப்பல முறையும் இற்றைக்கும் காணலாகும். இதனையொத்த ஸரஸ்வதீ மஹாலயம் மற்றொன்று அக்காலத்தும் இக்காலத்தும் வேறெந்தச் சுதேசராஜாங்கத்திலுமே இல்லை. உத்தரதேசங்களில் மதத்துவேஷிகளான முரட்டுச்சாதியார்களின் படையெடுப்புக்களாலும் அடாதசெய்கைகளாலும் தருமபுருஷன் ஆங்குத் தரித்திருக்க இடம் பெறாது தக்ஷிணதேசம் நோக்கி ஓடிப்பதுங்கியிருக்கவேண்டியதாயிற்று. அங்கிருந்த நகரங்களும் கிராமங்

களுங்கூட அக்கிநிபகவானுக்கிரையாக்கப் பட்டனவாம். உத்தரதேசங்களிலிருந்த பெரிய புத்தக சாலைகளின் கதியென்னவாயிருக்குமென யாம் இங்கெடுத்துக் கூறவேண்டியதில்லை. இங்ஙனமிருக்கத் துங்கபத்திரா நதிக் கரையில் வித்தியாநகரம் (விஜயநகரம் என்பதனைத் தலைநகராகக்கொண்டு விஜய நகரராஜ்யம் தலையெடுத்தெழும்பவே நாவிலும் நினைப்பிலும் வேத வேதாங்க சாஸ்திரங்களனைத்தும நிலைகொண்ட கல்விமான்கள் கூட்டங் கூட்டமாக ஆங்கு வந்து கூடினர். வேதபாஷியங்களாதிய எண்ணிறந்த சிறந்தக் கிரந்தங்களைச் செய்தனர். காலவழியில் கலிபுருஷனது கொடுமையால் அவ்விராஜாங்கமும் கலைந்து கலவரப்பட்டு அதன் தலை நகரமும் அழிபட்டு இருந்த சோடுந் தெரியாது மறைபவே ஆங்கிருந்த அரிய பெரிய புத்தகசாலைகளும் தண்டாரூப நியாயமாயின. பின்னர் தரும புருஷன் தேசம் தேசமாகத்திரிந்து காவேரி தீரஞ்சேர்ந்து சோளதேசம் வந்து வாழ்ந்திருந்தனன். அந்நாட்களில் தோன்றியதாகும் தஞ்சாவூரிலுள்ள ஸரஸ்வதீ மஹாலயம்.

அந்நாள்தொட்டு நம் தேசத்தாருக்கும் பிறதேசத்தாருக்கும் தெரியுமாறு கல்விவிஷயமாக நம்தேசத்தவர்களுக்கு நெடுங்காலமாக வேற்பட்டிருந்த பெருஞ்சிறத்தைக்கும் புராதநகல்விச்சிறப்புக்கும் இஃதோர் அறிகுறியாகவுளது. வருஷந்தோறும் இந்தியாவினின்றுமட்டுமேயன்றி ஐரோப்பா அமெரிக்காக் கண்டங்களிலுள்ள பலவிடங்களினின்றும் பல புத்தகங்களுக்குப் பிரதி ரூபங்கள் ஆங்குள்ளோரால் அபேக்ஷிக்கப்பெற்று, அவர்களுக்கு அவைகள் அனுப்பப்பட்டு, அந்தந்த தேசபாஷைகளில் நீண்ட முகவுரைகளுடனும் குறிப்புக்களுடனும் மொழிபெயர்ப்புக்களுடனும் விலையறப்பெற்று அச்சிட்டு

வெளிப்படுத்தப்படுகின்றன. தமக்குரிய வைதிகச் சடங்குகளில் சந்தேகம் நேரிடுங்கால், சுற்றுப்பக்கங்களிலுள்ள பலக் கிராமங்களினின்றும் பிராஹ்மணர்கள் வந்து ஸரஸ்வதீ மஹாலயத்துள்ள தருமசாஸ்திரங்கள் முதலியவைகளைப் பார்த்துத் தம் ஸந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டு போதல் நெடுங்காலந்தொட்டுவந்த வழக்கமாக வுளது. கல்விவிஷயமாகவும் தேசவிஷயமாகவும் செய்யப்படும் சரித்திரவாராய்ச்சிகளுக்கு சிலர் சாஸநங்களும் தாம்பிர சாஸநங்களும் பேருதவிகளாமாறுபோல பழைய கிரந்தங்களும் பேருதவிகளாகவுள்ளன,

இக்காலத்தில் அச்சுப் புத்தகங்கள் வெளி வந்துவிட்டனவென்று கருதி எவ்வளவோ கையெழுத்துப் புத்தகங்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் ஆறுகளிலும் குளங்களிலும் எறியப்படுகின்றன. பழைய காகிதப் புத்தகங்கள் பல பலசரக்குக்கடைகளில் பொட்டலங்கள் கட்ட உதவுகின்றன. அவைகளில் அச்சுக்குவராத புத்தகங்களும் பலவுள்ளன. இவ்வாறு அருமை தெரியாது வீணாக்கப்படும் புத்தகங்கள் எவையாயினும், அங்ஙனம் வீணாக்கப்படாது அவைகளை ஓரிடத்தில் வைத்துப் பாதுகாத்தல் புத்தகக்காரர்களுக்கோர் விதகஷ்டத்தையும் விளைவிக்காது. எற்கனவே, ஆஸ்திகஜநோபயோகமாக ஓர் ஸரஸ்வதீ மஹாலயத்தை கும்பகோணமடத்தில் ஏற்படுத்தல் நமது ஆசாரியஸ்வாமிகளவர்களது கருத்தாகுமென் ஆர்யதர்மத்தின் வாயிலாய் வெளியிடப்பட்டுளது. இதற்கு சிஷ்யவர்க்கங்கள் எவரும் முன்வந்து உதவி புரிவது கடமையன்றோ? தஞ்சையிலுள்ள ஸரஸ்வதீ மஹாலயமும் இப்பொழுது விவாதத்திலிருத்தலின், அதன் கதியென்னவாகுமோவென்ற அச்சம் ஜனங்களின் மனத்தை உறுத்துகின்றது. இச்சமயத்தில் ஸந்நிதானத்திலிருந்து

ஓர் ஸரஸ்வதீ மஹாலயத்தை ஏற்படுத்துவது ஏற்புடைத்தாம். இவ்விதம் தேசோபகாரமாக வைக்கப்படும் ஸரஸ்வதீ மஹாலயத்திற்கு, நற்காரியத்தில் தமக்கே நாட்டமுள்ள கனவான்கள் பலரும் தம்மாலான உதவி எவ்வகையானும் செய்வார்களென்பதற் கையமில்லை. சிலர் ஏதேனும் பொருள் உதவியும், சிலர் தம்மிடத்து அதிகப்படியாகவுள்ள ஏதேனும் புத்தகங்களை உதவியும், நன்மை புரியலாகும். இவ்விருவகையானும் உதவிசெய்ய இயலாதவரும், இவ்விருவகை உதவிகளுக்கும் மேலாய் வேறொரு விதமாக உதவிபுரியவும் உதவிபெறவும் கூடும். அஃதென்னவெனில், அங்ஙனமேற்படும் புத்தகசாலையில்வந்து புத்தகங்களை வாசித்து விஷயங்களை ஆராய்ந்து நன்கறிந்து கொள்ளுதலேயாம். அஃதில்லாத ஸரஸ்வதீ மஹாலயம் இருந்ததனாலாகிய பயன்தான் யாது? அதுவேயாகும் அவர்கள் செய்யத்தகும் பேருதவி. நிற்க, அருமையான பழைய ஸம்ஸ்கிருதக் கிரந்தங்களை, யாருமறியாது பாழாய்ப்போக மனம்பொறாது, பெரிய மனதுகொண்டு ராஜாங்கத்தினின்றுமே அச்சிட்டுவெளிப்படுத்தும் தருமசிந்தனைகொண்டுள்ள தேசமன்னர்களும், அச்சிட்டவப் புத்தகங்களின் பிரதிகளை லோகோபகாரமாகவுள்ள ஸரஸ்வதீ மஹாலயத்திற்கு நிச்சயமாய்த் தந்துதவுவார்கள். அன்றியும், பழைய கிரந்தங்களை அச்சிட்டு வெளிப்படுத்தி யுலகுக்குதவுவதையே பிறவிப்பயனாகக்கொண்டு பொருட் செலவையும் தேகச்சிரமத்தையும் பாராது அச்சாப்பீஸுகளையும் ஏற்படுத்தி நல்வழியில் பாடுபடும் ஆஸ்திகசிரோமணிகள் சிஷ்யகோடியில் பலருளர். அவர்களும் விலைவாசியில் இயன்றவரையில் சகாயஞ்செய்து புத்தகங்களை உதவுவார்கள். சுயநயம் பாராட்டாது, பொது நன்மையை உத்தேசித்து லோகோ

பகாரமாகச் செய்யப்படும் இத்தகைய நற்காரியங்களுக்குதவி செய்ய எவர்தாம் முன்வராதிருப்பர்? ஆகலின் இவ்விஷயத்தைப்பற்றிக் காலந்தாழ்த்தாது விளம்பரப் பத்திரிகையொன்று எங்கும் பரவச்செய்து, ஸ்ரஸ்வதி மஹாலயாரம்பத்திற்கு ஓர் நாள் குறிப்பிட்டு, தேசாபிமானிகளும் பாஷாபிமானிகளும் ஜனாபிமானிகளும் வித்தியாபிமானிகளுமாகிய மஹான்களைக் கூட்டி, அவர்களது அபிப்பிராயத்திற்கொத்து வேண்டிய வேற்பாடுகள் செய்யப்படவேண்டும். இதற்கு ஈசனருள்புரிய மனமொழி மெய்களால் பிரார்த்திக்கின்றேன்.

T. S. குப்புஸ்வாமி சாஸ்திரி.

---

# மதவிவேகம்.

सर्वप्रमाणवेद्याय सच्चिदानन्दरूपिणे ।
नमः शिवाय शान्ताय विष्णवे ब्रह्मणे नमः ॥

## I. ஆர்யதர்மம்.

ஆர்யர்களென்றால் பூஜிக்கத்தக்கவர்கள். அவர்கள் ஆஸ்திகர்கள். ஆஸ்திகர்களென்றால் பிரமாணமூலமாக பரலோகத்தையும், அதற்கு ஸாதனமான புண்ணியம் முதலியவைகளையும், அவைகளின் பயனையளிக்கும் ஈச்வரனையுமங்கீகரித்தவர்கள். அதற்கு விபரீதமாயிருப்பவர்கள் நாஸ்திகர்கள். நாஸ்திகர்களுக்கு உயர்ந்த கெதி கிடையாது. அவர்கள் ஆர்யர்களுமாகார். அதுபற்றியே. காடகசுருதியானது

'अयं लोको नास्ति पर इति मानी पुनः पुनर्वशमापद्यते मे ।'

என்கிற வாக்கியத்தால் இந்தவுலகமேயுளது, பரலோகம் கிடையாதென்கிற துரபிமானியானவன் அடிக்கடி 'என் வசத்தையடைகின்றானென்று நாஸ்திகரின் கொள்

கையையும் அவரடையும் கெதியையும் யமன் சொன்ன தாக நிர்த்தித்து மொழிந்தது. ஆகையால் நாஸ்திகராகி யமன் வசமாகாமல், ஆஸ்திகராயிருந்து ஆர்யதர்மமென்றும் ஸநாதநதர்மமென்றும் விளங்காநின்ற பரலோக ஸாதனத்தைத் தெளிவாயறிந்து குறைவற அநுஷ்டித்து ஸுத்கெதியை சம்பாதித்துக் கொள்ளுவதே பிறவியின் பயனாகும்.

அதுபற்றியே ஒரு ஆர்யர்

परिवर्तिनि संसारे मृतः को वा न जायते ।
स जातो येन जातेन याति वंशः समुन्नतिम् ॥

பெருஞ்சுழல்போல் சுழலுகின்ற ஸம்ஸாரத்தில் மரித்து மீறுபடி பிறக்காதவர் யார்? அப்படிப் பிறந்தவரி லெவர் தன் வம்சத்தையே மேன்மையடையச் செய்கின் றனரோ அவர் பிறவியே பிறவியென்று மொழிந்தனர்.

ஆகையால் ஸநாதனமான தர்மத்தை நன்கு அறிந்து கொண்டு அதைச் சம்பாதிக்க வேண்டும்.

அவ்விதமறிய வேண்டியது பிரமாணத்தைக் கொண் டாதலால் முதலில் பிரமாணத்தை விசாரிக்கவேண்டும்.

## II. பிரமாண நிரூபணம்.

பிரமாணமென்றால் என்ன? பிரமையையுண்டுபண் ணுகின்ற சாதனம். பிரமை என்றால் மாறாத அறிவு. அதாவது எது எவ்விதமிருக்கின்றதோ அதை அவ் விதமே அறியுமறிவு. அதெங்ஙனமெனில் வெள்ளியை வெள்ளியென்றும், ஸர்ப்பத்தை ஸர்ப்பமென்றும், ஜலத் தை ஜலமென்றுமறிவது பிரமை. இது ஒருநாளும் மாறாது.

பிரமைக்கு விபரீதமாயுள்ள அறிவு பிரமம். அதா வது ஒரு விதமாயிருப்பதை வேறு விதமாக அறிகின்ற அறிவு. அதெங்ஙனமெனில், கிளிஞ்சலை வெள்ளியென்

றும், பழுதையைப் பாம்பென்றும், கானலை ஜலமென்று மறிவது பிரமம். இது உற்றுப் பார்க்கில் மாறிவிடும். பிரமையானது ஹிதத்தையளிக்கும். ஜலத்தை ஜலமென்றறிந்து பிரவிருத்தித்தால் ஜலம் கிடைக்கும். அதை யருந்தி தாகத்தைத் தீர்த்துக்கொள்ளலாம். கானலை ஜலமென்று பிரமித்து பிரவிருத்தித்தவனுக்குத் தாகமதிகரிக்கும். ஆகையால் பிரமாணத்தைக் கொண்டு பிரமையையே அடையவேண்டும். அவ்விதம் அறிகின்றவனுக்குப் பிரமாதா' வென்று பெயர். அவனால் அறியப்பட்டது பிரமேயம்.

கண்ணால் ஜலத்தை ஜலமாக அறிகின்றவன் பிரமாதா. அவனுடைய அந்த அறிவு பிரமை. அந்த நேத்திரம் பிரமாணம். அந்த ஜலம் பிரமேயம்.

கானலை ஜலமாக அறிவது பிரமம். அவ்விதமறிபவன் பிராந்தன். அதற்குக் காரணம் தோஷம்.

பிரமாணம் எட்டு விதமாகும்:—1. பிரத்தியக்ஷம், 2. அநுமானம், 3. உபமானம், 4. சப்தம், 5. அர்த்தாபத்தி, 6. அநுபலப்தி, 7. ஐதிஹ்யம், 8. சேஷ்டை

### 1. பிரத்தியக்ஷப் பிரமாணம்.

பிரத்தியக்ஷமென்பது இந்திரியங்கள். அது பாஹ்யம் என்றும், ஆந்தரமென்று மிருவகையாகும். பாஹ்யமென்றால் சரீரத்தில் வெளியிலுள்ளது. அது ஐவகையாகும். அதில்

1. நேத்திரம் ரூபத்தையறிய சாதனம்.

2. சுரோத்திரம் (காது) சப்தத்தை கிரகிக்கவேண்டி ஏற்பட்ட கருவி.

3. கிராணம் மூக்கின் நுனியிலிருக்கின்றது. இது கெந்தத்தை கிரகிக்கவேண்டி ஏற்பட்ட கருவி.

4. ரஸனை நாக்கின் முனையிலிருக்கின்றது. இது ரசத்தையுணர ஏற்பட்டது.

5. துவக் மேல்தோலில், உள்ளங்கால் முதலுச்சி வரையிருக்கின்றது. இது சூடு, குளிர்ச்சி முதலிய ஸ்பரிசத்தையுணர் ஏற்பட்டது.

ஆந்தரமென்றால் சரீரத்திற்குள்ளேயிருக்கின்ற இந்திரியம். அது அந்தக்கரண மெனப்படும். அது சுகம் துக்கம் முதலியதை கிரகிக்கவேண்டி ஏற்பட்டது. அது தனது வியாபாரத்தை முன்னிட்டு மனம், புத்தி, அகங்காரம், சித்தமென்று நான்கு வகையாகும்.

ஒரு பதார்த்தத்தைக் கருதும்பொழுது, பொதுவாக இதுவென்று சங்கல்பஞ் செய்வது மனம். அதை நன்கு விசாரித்து நிச்சயிப்பது புத்தி. அதை அபிமானிப்பது அகங்காரம். அதைச் சிந்திப்பது சித்தம்.

இந்த அந்தக்கரணம், வெளிப்புலன்களால் கிரகிக்கப்பட்டசப்தஸ்பர்சம் முதலிய பாஹ்ய விஷயங்களையும், உள்ளேஏற்படும் சுகதுக்கம் முதலிய விஷயங்களையும், கர்த்தாவாயும் போக்தாவாயுமிருக்கிறஜீவனுக்கு அடுத்திருந்து ஸமர்ப்பணம் செய்யும் ஸாதனம். ஆகையாலிது அந்தரங்க ஸாதனம். இந்த ஆறு விதங்களான புலங்களாலுண்டான உண்மையான அறிவைப் பிரத்தியக்ஷப் பிரமை யென்பார்கள். அதில், இது கடம், இது வஸ்திரம், என்று நேத்திரத்தினாலுண்டாவது சாக்ஷுஷப் பிரத்தியக்ஷம். இது கடமென்கிற சப்தம், இது படமென்கிற சப்தமென்று சுரோத்திரத்தினாலுண்டாவது சிராவணப் பிரத்தியக்ஷம். இது நல்ல வாஸனை, இது கெட்ட வாசனை என்று கிராணத்தினாலுண்டாவது கிராணஜப் பிரத்தியக்ஷம். இது தித்திப்பு, இது புளிப்பு, இது கசப்பு என்று ரஸனையா

லுண்டாவது ராஸநப் பிரத்தியக்ஷம். இது குளிர்ச்சி, இது உஷ்ணமென்று துவக்கினலுண்டாவது, துவாசப் பிரத்தியக்ஷம். நான் சுகமுடையவன், நான் துக்க முடையவனென்று மனத்தினலுண்டாவது மானஸப் பிரத்திய்க்ஷம். இவ்விதம் ஆறு விதம் பிரத்தியக்ஷப் பிரமை. அதற்குக் காரணமாக இந்திரியங்களாறும் பிரமாணங்கள்.

## 2. பிரமாண மனுமானம்.

அதிலுண்டாகிற அறிவு அனுமிதியெனப்படும். அதாவது வியாப்பியத்தைக்கொண்டு வியாபகத்தை நிச்சயிக்கும் நிச்சயம்.

எது இல்லாவிடில் எது இருக்கிறதில்லையோ அதற்கு அது வியாப்பியம். அக்கினி இல்லாவிட்டால் புகையிருக்கிறதில்லையாகையால் அக்கினிக்குப் புகை வியாப்பியம்.

எது இருக்குமிடமெல்லாம் எது இருக்கின்றதோ அதற்கு அது வியாபகம். புகையிருக்குமிடமெல்லா மக்கினியிருக்கின்றதாகையால் புகைக்கு அக்கினி வியாபகம்.

புகையிருக்குமிடத்தில் அக்கினியிருந்து தீருகின்றபடியால் வியாப்பியமிருந்தால் வியாபகமிருந்து தீரவேண்டும். கொல்லனுடைய உலைக்கூடத்தில் அக்கினியிருந்தும் புகையில்லாமலிருப்பதால் வியாபகமிருந்தால் வியாப்பியமிருந்து தீரவேண்டுமென்கிற நியமமில்லை.

வியாப்பியத்தைக் கொண்டு வியாபகத்தை நிச்சயிப்பதே அனுமிதி.

பர்வதத்தில் புகையைக்கண்டு செடிகளால் மறைபட்ட அக்கினியைப் பார்க்கமுடியாமல் இவ்விடத்தில் அக்கினியிருக்குமா, இராதாவென்று சந்தேகத்தையடைந்தவனை நோக்கி, மற்றொருவன் " 1. இந்தப் பர்வதத்தில்

அக்கினியிருக்கின்றது. 2. புகையிருக்கின்றபடியினாலே. 3. அடுக்களை முதலிய எவ்விடமெல்லாம் புகை இருக்கின்றதோ அவ்விடமெல்லா மக்கினி யிருப்பதைக் காண்கிறோம். அதுபற்றி அக்கினிக்குப் புகை வியாப்பியம். 4. இந்த மலையில் அக்கினிக்கு வியாப்பியமான புகையிருக்கிறது. 5. வியாப்பியமான புகையிருப்பதால் இந்த மலையில் வியாபகமான அக்கினியிருப்பது நிச்சயம்." என்று ஐந்து வாக்கியங்களைச் சொல்லும்பொழுது ஸந்தேகபட்டவனுக்கு மலையில் அக்கினியிருப்பதாக நிச்சயமுண்டாகின்றது. அவனுக்குண்டாகுமந்த நிச்சயமே அநுமிதி. இந்த நிச்சயம் பிரமை. அதற்குரிய பிரமாணமனுமானம்.

அக்கினிக்குப் புகை வியாப்பியமென்று அறியுமறிவே அனுமானமென்று புதுத்தார்க்கிகரின் கொள்கை.

அக்கினிக்கிது வியாப்பியமென்று அறியப்பட்ட புகையே அனுமானமென்று பழைய தார்க்கிகரின கொள்கை. வியாப்பியமனுமானமானாலும், வியாப்பியத்தை அறியுமறிவு அனுமானமானாலும் அனுமானத்தாலுண்டானது அனுமிதி. அனுமிதியையுண்டுபண்ணும் பிரமாணமனுமானம். இந்தப் பிரமாணத்திற்கு நேத்திரம் முதலிய புலன்கள் ஸாதகமாகும்.

வியாப்பியமில்லாததைக் கொண்டு வியாபகமாகாததைத் தீர்மானித்தாலந்த நிச்சயம் பிரமமாகும். பிரமையாகாது.

## 3. உபமானப் பிரமாணம்.

உபமானத்தாலுண்டாகிற ஞானம் உபமிதியெனப்படும். இதின் தத்வமாவது—கெவயமென்றொரு காட்டு மிருகமிருப்பதாகக் கேட்ட ஒரு புருஷன், காடு சென்று

கெவயத்தையறிய விருப்பமுடையவனாய், அங்குள்ள புருஷனைக்கண்டு கெவயமென்பது எவ்விதமாயிருக்குமென்று வினவ, அவன் கெவயம் பசுவுக்கு நிகராயிருக்குமென்று சொன்னதைக்கேட்டு, மறுபடி செல்லுகையில் கெவயம் வர, அதைக்கண்டு இது பசுவுக்கு ஸமானமாயிருக்கிறதென்று அந்த மிருகத்தினிடம் பசுவினுடைய உவமையை முதலில் அறிந்து, பிறகு இதுதான் கெவயமென்று சொல்லப்படுவதென்று நிச்சயிக்கிறான். அவனது அந்த நிச்சயமே உபமிதி. அது பசுவின் உவமையாலுண்டானதால் அதில் காணப்பட்ட உவமையே உபமானமென்கிற பிரமாணமென்று பழைய நையாயிகர்கள் சொல்லுகின்றனர். பசுவின் உவமையை யறிந்து இந்த நிச்சயத்தை யடைந்தமையால் உவமையினுணர்வே உபமானமென்று புது நையாயிகர்கள் மொழிகின்றனர். உவமையாலானாலும் சரி, உவமையினறிவாலானாலும் சரி, இதுதான் கெவயமென்கிற சப்தத்திற்கு அர்த்தமென்கிற நிச்சயம் உபமிதி. அதற்கு சாதனமாயுள்ளது உபமானப் பிரமாணம்.

வேதாந்திகள் உபமானத்தைச் சரியென்று ஒத்துக் கொண்டார்கள்.

உபமிதியை வேறாகச் சொல்லுகின்றனர். அதெங்ஙனமெனில், கெவயத்தில் பசுவின் உவமையைக் கண்டவுடன் இதுபோலிருக்கின்றது பசுவென்று பசுவினிடம் கெவயத்தின் உவமையை அறிகின்றான். அதுதானுபமிதியென்று சொல்லுகின்றனர். இந்தப் பிரமாணத்திற்கு நேத்திரம் ஸாதகமாகும்.

இன்னும் வரும்.

வேதாந்தவிபூஷணம் க. ச. கிருஷ்ண சாஸ்திரிகள்.

# ஆன்ஹிகச்சுருக்கம்.

## 32. ஸ்நானத்தின் பிரிவு.

விடியற்காலத்திற் செய்யும் நித்திய ஸ்நானத்தை நிரூபித்தபின் அதைச் சார்ந்து மற்ற ஸ்நானங்களின் சொரூபத்தையும் நிரூபிப்பாம். ஸ்நானம் முக்கியமென்றும், கௌணமென்றுமிருவகைப்படும். அவற்றுள் வாருணமென்பது முக்கியம். வாருணமென்றால் தலை முதலிய ஸர்வாங்கங்களும் நனையும்படி ஜலத்தில் மூழ்குவது. அது ஆறுவிதமாகும், 1. நித்தியம், 2. நைமித்திகம், 3. காம்மியம், 4. கர்ம்மாங்கம், 5. மலாபகர்ஷணம், 6. கிரியாஸ்நானம், என்று. இவைகளின் இலக்கணம்—1. ஸ்நானம் செய்யாதவன் ஜபம், ஹோமம் முதலிய கர்மங்களை யனுஷ்டிக்க யோக்கியனாகமாட்டான். அதற்காக விதிக்கப்படும் ஸ்நானம் நித்திய ஸ்நானமெனப்படும். 2. சண்டாளன், பிணத்தின் புகை, ரஜஸ்வலையான ஸ்திரீ, முதலியவர்களின் பக்கத்திற் சென்றதினால் உண்டான அசுத்தியை நிவர்த்திப்பதற்காக விதிக்கப்படுவது நைமித்திக ஸ்நானமெனப்படும். 3. சோதிடவித்துவானால் பல காமனைக்காக விதிக்கப்பட்ட புஷ்யஸ்நானம் முதலியவை காம்மிய ஸ்நானமாகும். இதில் காமனையுள்ளவன்றான் அதிகாரி. காமனையில்லாதவன் செய்யவேண்டாம். 4. புண்ணிய மந்திரங்களை ஜபிக்கவாவது, தேவதைகளையோ பிதிருக்களையோ ஆராதிக்கவாவது சுருதி, அதிற்கு அங்கமாக செய்யப்படும் ஸ்நானம் கர்மாங்க ஸ்நானமாகும். 5. மலத்தைக் களைவதற்காக எண்ணைதேய்த்து ஸ்நானம் செய்வது மலாபகர்ஷண ஸ்நா

னமெனப்படும். மலத்தைப்போக்குவதற்காகத் தானிதில் பிரவிர்த்தி. 6. ஸரஸ்ஸுகள் தேவகாதம் முதலிய தீர்த்தங்கள், மஹாநதிகள் முதலிய புண்ணிய தீர்த்தங்களிற்சென்றால் அங்கு செய்யவேண்டியதாக விதிக்கப்பட்ட ஸ்நானம் கிரியாஸ்நானமெனப்படும். நித்தியமாகச் செய்யவேண்டிய ஸ்நானம் நித்திய ஸ்நானம் என்று கூறினமையால் மத்தியான்னவேளையிற் செய்யவேண்டிய ஸ்நானமும் நித்திய ஸ்நானமாகவேயாகும். இந்தப் பிரசங்கத்தால் அந்த மத்தியான்ன ஸ்நானத்தை யிங்கு நிரூபிப்பாம். சூரியோதயாதி பன்னிரண்டு நாழிகைக்குமேல் பதினெட்டு நாழிகைக்குட்பட்ட காலம் மத்தியான்ன காலமாகும். அந்த மத்தியானகாலத்தில், காலையில் ஸ்நானம் செய்திருப்பினும் மீண்டும் ஸ்நானம் செய்யவேண்டும். பின்பு மாத்தியான்னிக சந்தியானுஷ்டானம் ஜெபம், சூரியோபஸ்தானம், வைசுவதேவம் முதலியவைகளை யனுஷ்டிக்கவேண்டும். பவித்திரத்தைக் கையிலணிந்து, திசைகளைச்சுற்றிப்பாராமல் தீர்த்தத்திற் சென்று மத்தியான ஸ்நானம் செய்யவேண்டும். ரோகமில்லாதவன்தான் இதைச் செய்யவேண்டும். ஸ்வஸ்தனாயிருப்பவனும் முதல் நாள் சாப்பிட்ட அன்னம் நன்றாய் ஜீர்ணமான பின்புதான் செய்யவேண்டும். போஜனம் செய்தவனும், அலங்கரித்துக்கொண்டிருப்பவனும் ரோகியும் ஸ்நானம் செய்யக்கூடாது. காலையில் ஸ்நானம் செய்தவன் மத்தியான்னகாலத்தில் ஸ்நானம்செய்யச் சக்தியற்றவனாகில் ஈர வஸ்திரத்தால் உடம்பைத் துடைத்துக்கொள்ளலாம். எப்பொழுதும் மந்திரங்களை யுச்சரித்துக்கொண்டு சுத்தமான தீர்த்தங்களிற் செய்யும் ஸ்நானம் தான் பயனுள்ளதாகும். தண்ணீரில் முழுகுவதால் மாத்திரமே பயனில்லை. மீன், ஆமை, தவளை முதலிய பிராணிகள் அல்லும் பகலும் தண்ணீரிலேயே

மூழ்கிக்கிடக்கின்றன. அவைகளுக்கு ஸ்நானத்தின் பயனுண்டோ? இல்லையல்லவா. அதுபோலவே விதிப்படி செய்யபடாத ஸ்நானம். சுருதிஸ்மிருதிகளில் ஓர் முறைப்படி விதிக்கப்படும் கர்மத்தை அந்த முறைதவறிச் செய்தானாகில் அதன் பயனையடையாததோடு வீணாய் சிரமத்தையடைவான். கோரமான நரகத்தையுமடைவான். இங்ஙனம் மந்திரத்தோடு செய்யவேண்டிய ஸ்நானம், பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய இவர்களுக்குத்தான் விதிக்கப்படுகின்றது. ஸ்திரீகளுக்கும், சூத்திரனுக்கும் மந்திரமில்லாமலே ஸ்நானம் கூறப்பட்டிருக்கின்றது.

## 33. ஸ்நானத்திற்குரிய தீர்த்தங்கள்.

(1) நதி (2) தேவகாதம், (3) தடாகம், (4) ஸரஸ்ஸு, (5) கர்த்தம், (6) பிரஸ்ரவணம், (7) நதம், (8) ஸ்ரோதஸ், (9) குண்டம், (10) தாரை, (11) கிணறு, இந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்யலாம். இவற்றுள் (1) நதியென்பது மஹாநதியென்று கொள்ளவேண்டும். மஹாநதியின் இலக்கணமாவது— யாதாமொரு ஜலப்பிரவாஹம் மலையின் கண் உற்பத்தியடைந்து கீழ் திசைநோக்கிப் பிரவஹித்துக் கீழ் சமுத்திரத்திற் சேருகின்றதோ அது மஹாநதி யெனப்படும். அதிற் செய்யும் ஸ்நானம் சகலபாபங்களையுமகற்றும். 'சாந்திராயண கிருச்சிரமும், மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களும், பதினாயிரம் காயத்திரீ ஜபமும், மஹாநதியில் ஸ்நானமும் இந்நான்கும்சமமாம்' என்று ஸ்மிருதிகளில் மஹாநதி ஸ்நானம் ஸ்துதிக்கப்படுகின்றது. (2) தேவகாதமென்பது— 'மனிதர்களால் வெட்டப்படாததும், நான்குபுறமும் கரைகளோடு கூடினதும், எந்நாளும் வற்றாததுமாக பூமியிலாவது மலையிலாவது தேங்கி நிற்கும் தீர்த்தம். விஸ்தீர்ணமுள்ளதாயினும் விஸ்தீர்ணமில்லாததாயினும் அதுவே தேவகாத

மெனப்படும்.' என்ற லக்ஷணமுள்ளதாம். (3) தடாக மென்பது—'சந்திரபிம்பத்தின் பாதிபோன்ற வடிவின தாக கிராமத்திலாவது காட்டிலாவது மலையிலாவது தே ங்கியிருக்குந் தீர்த்தம் தடாகமெனப்படும்'. என்ற இலக் கணமுள்ளதாம். (4) ஸரஸ்ஸென்பது— 'மலையின் தாழ்வரையிலாவது மலையின் உயர்ந்த பிரதேசத்திலா வது சக்கிரம்போன்ற வடிவினதாக என்றும் வற் றாமல் மகரிஷிகளால் ஸேவிக்கப்பட்ட விஸ்தீர்ணமா யுள்ள தீர்த்தமே ஸரஸ்ஸெனப்படும். தாமரை முதலிய புஷ்பங்களுள்ளதாயுமிருக்கும்.' என்று கூறப்பட்ட சொ ரூபம் பொருந்தியதாகும். (5) கர்த்தம் என்பது—'கிரா மத்தின் உபயோகத்திற்காவது, பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காவது மனிதர்களால் வெட்டப்பட்ட வாய்க் காலின் வழியாக ஆறு ஏரிகளினின்றும் வெளிப்பட்டு எண்ணாயிரம் விற்கடை தூரத்திற்குள்ளாகவே வற்றிப் போகின்ற தீர்த்தமே கர்த்தமென்றும் நாளமென்றும் சொல்லப்படும்' என்ற இலக்கணமமைந்ததாகும். (6) பிரஸ்ரவணமென்பது—'மலையருவி' யெனப்படும். (7) நதமென்பது—'கிழ்த்திசைகளிலுள்ள மலைகளிலுண்டாகி மேற்றிசை நோக்கிப் பிரவஹித்து மேல் சமுத்திரத்திற் சேர்கின்ற பிரவாஹம் நதமெனப்படும்' எனக்கூறப்ப ட்டதாகும். (8) ஸ்ரோதஸ்ஸென்பது—'பூமியிலாவது மலையிலாவது பெய்த மழைஜலம் பிரவாகமாயோடி ஆற் றில் விழுந்தாலும் கொஞ்சதூரமோடித் தானாகவே ஒய்ந்து விட்டாலும் ஸரி, அதுவே ஸ்ரோதஸ்ஸு எனப்படும்' என்ற சொரூபம் வாய்ந்தது. (9) குண்டமென்பது— 'நான்கு பக்கங்களுள்ளதாகக் கற்களால் கட்டப்பட்டதும் படிக்கட்டு வரிசைகளோடு கூடினதும் தாழ்ந்து ஜலமுள்ள துமான தீர்த்தம் விஸ்தீர்ணமுளதேனும் விஸ்தீர்ணமற்றதே

னும் ஸரி, அது குண்டமெனப்படும்' என்று கூறப்பட்டதாகும். (10) மலைகளின் வேர்களுடைய துவாரத்தின் வழியாக ஓடிவந்து அதற்கு நேராகப் பிளந்து உண்டாக்கப்பட்ட துவாரத்தினின்று வந்துவிழும் தீர்த்தம் தாரையெனப்படும். (11) ஐந்து முழம் விசாலமுள்ளதாகத் தோண்டப்பட்டு கற்களாலாவது மரங்களாலாவது கட்டப்பட்டது கிணறெனப்படும். இங்ஙனம் பதினொரு இடங்களிலுள்ள தீர்த்தம் ஸ்நானத்திற்குரியதாகும். கங்காளம், கொப்பரை, தொட்டி முதலியவைகளில் நிரப்பப்பட்ட தீர்த்தத்தைவிட பூமியில் தேங்கியிருப்பது சிறந்தது. பூமியிற் றேங்கியுள்ளதைவிட மலையருவி சிரேஷ்டம். அதைவிட ஸரஸ்ஸின் தீர்த்தம் விசேஷமுள்ளது. ஸரஸ்ஸைவிட நதி தீர்த்தம் புண்ணியமாயது. அதைவிட ஸாதுக்களால் ஸேவிக்கப்பட்டது உத்தமம். எல்லாத் தீர்த்தங்களைவிட கங்கா தீர்த்தம் மிகவும் சிறந்தது. கங்கையோர் பக்கமும், மற்ற தீர்த்தங்களனைத்துமோர் பக்கமும் வைத்து நிறுத்தால் கங்கைதான் புண்ணியத்தில் சிறந்ததாகும். விஷ்ணுபாதத்திலுற்பத்தியாகி ஈசனது சிரஸில் வந்து பிறகு பூமியில் வந்ததாம் கங்கா தீர்த்தம். அதனாலது உத்தமமாகும். அந்த கங்கா தீர்த்தம் பூமியில் பிரவஹித்தாலும் பாத்திரங்களிலெடுத்து வைக்கப்பட்டாலும் சீதமாயிருந்தாலும், உஷ்ணமாகவிருந்தாலும் சகல பாபங்களையும் விலக்கும். ஸமுத்திரத்தில் விழாத நதிகளில் செய்த ஒரு ஸ்நானம் குளம் முதலியவைகளில் மூன்று தினம் செய்யப்பட்ட ஸ்நானங்களின் பயனைத் தரும். சமுத்திரத்தில் விழும் மஹா நதிகளில் செய்யப்பட்ட ஒரு ஸ்நானம் மற்ற தீர்த்தங்களில் பதினைந்து நாள் செய்யப்பட்ட ஸ்நானங்களின் பயனைத் தரும். சமுத்திரத்திற் செய்யப்பட்ட ஸ்நானம் மற்ற தீர்த்தங்களில்

ஒரு மாஸம் செய்யப்பட்ட ஸ்னானத்தின் பயனைத்தரும். ஜலம் தேங்கியிருக்குமிடத்தில் ஜல விஸர்ஜனம் செய்யலாகாது. ஸ்னானம் செய்வதற்காக நதியைத்தாண்டி அப்புறம் செல்லலாகாது. நதியைத்தாண்டி அப்புறம் போகவேண்டிய அவசிய காரியம் நேர்ந்தால் அதில் ஆசமனம் செய்துவிட்டு தாண்டவேண்டும். ஆசமனம் செய்யாமல் தாண்டக்கூடாது. பிறனால் வெட்டப்பட்ட குளம் கிணறு வாய்க்கால் முதலியவைகளில் ஸ்னானம் செய்யக்கூடாது. செய்துவிட்டால் அந்தக் குளம் முதலியவை வெட்டியவனுடைய பாபத்தைப் பங்கிட்டுக்கொள்பவனாவான். பிறனுடைய வாகனம், படுக்கை, ஆஸனம், கிணறு, சிங்காரத தோப்பு, வீடு முதலியவைகளை அவன் கொடுக்காவிடில் உபயோகிக்கக்கூடாது. உபயோகித்துவிட்டால் அவனுடைய (பிறனுடைய) பாபத்தின் நாலிலொரு பாகத்தையடைவான். ஆகையால் பொதுவான நதி முதலியவைகளிற்றான் ஸ்னானம் செய்யவேண்டும். நதி முதலிய பொதுவான தீர்த்தங்களில்லாமல் பிறனுடைய தீர்த்தந்தானிருக்கக்கூடிய விடங்களிலோவென்றால் அந்த பிறனுடைய தீர்த்தத்தினின்றும் நான்கு உண்டை மண்களையெடுத்துவிட்டு ஸ்னானம் செய்யலாம். சில ஸ்மிருதிகளில்—'ஐந்து மண்ணுண்டைகளை யெடுக்கவேண்டுமென்றும்' 'பத்து மண்ணுண்டை யெடுக்கவேண்டுமென்றும்' 'ஏழு, மூன்று மண்ணுண்டைகளை யெடுக்கவேண்டுமென்றும்' பலவாறாக அன்னியர்களின் குளம் முதலியவற்றில் ஸ்னானம் செய்வதானால் அதிலிருந்து எடுத்துப் போடவேண்டிய மண்ணுண்டைகளின் எண்ணிக்கை கூறப்பட்டிருப்பது அவரவர்களின் சக்திக்கேற்றபடி எடுக்கவேண்டுமென்ற கருத்தாலாமென்க. தடுக்கப்பட்ட தீர்த்தங்களிலும் ஸ்னானம் கூடாது. நடுநிசியில் புசித்த

லும், ஈரவஸ்திரந்தரித்தலும், ஒரே வஸ்திரம் தரித்தலும் தோஷமெனப்படுவதுபோல அன்னியர்களுடைய தீர்த்தத்தில் ஸ்னானம் செய்வது தோஷமாகும். ஆகையால் எல்லோருக்கும் பொதுவான ஆறு, தேவகாதம், ஸரஸ்ஸு முதலிய தீர்த்தங்கள் கிடைக்காதவிடத்தில் அன்னியர்களின் தீர்த்தத்தில் ஸ்னானம் செய்வதானால் தன் சக்திக்கேற்ப அதிலிருந்து மண்ணை யெடுத்துக்கரையின் மீது போட்டுவிட்டு ஸ்னானம் செய்யவேண்டும். கிணறுகளிலானால் மூன்று குடம் ஜலத்தையெடுத்துவிட்டு ஸ்னானம் செய்யவேண்டும். எடுக்காமல் ஸ்னானம் செய்துவிட்டால் அது வீணாகும். கிணறுகளில் தீர்த்தத்தை யெடுத்துவிட்டுக் கொண்டுதான் ஸனானம் செய்யவேண்டும். மண்குடங்களால் எடுத்து விட்டுக்கொள்ளக்கூடாது. முறத்தின் காற்றும், நகங்களின் நுனியாலுதறப்பட்டுத் தெறித்த ஜலமும், ஸ்னானம் செய்த வஸ்திரமும், மண்குடத்தால் எடுத்துவிட்டுக்கொண்ட தீர்த்தமும் விளக்குமாற்றின் தூசியும், மயிர் ஜலமும், மேலேபட்டால் பூர்வ புண்ணியங்களை நசிப்பிக்கும். காவல் போட்டு கட்டுப்பாடு செய்யப்படாத தீர்த்தங்களிலும் மடுக்களிலும், மண்ணை யெடுக்காமலே ஸ்னானம் செய்யலாம். தன்னுடைய குளம் கிணறு முதலியவைகளிலும் மண்ணெடுக்கவேண்டியதில்லை. அன்னியாயத்தால் பணம் சம்பாதித்தவன், கெட்டுப்போனவன், பணத்தைவட்டிக்குக் கொடுத்துப் பிழைப்பவன், சண்டாளன், இவர்களால் வெட்டப்பட்ட குளம், கிணறு, கால்வாய் முதலியவைகளில் ஸ்னானம் செய்யவே கூடாது. அன்னியர்களின் தீர்த்தமானால் மண்ணை யெடுத்துவிட்டு ஸ்னானம் செய்யலாமென்று கூறினது சண்டாளாதிகளின் தீர்த்தத்திலில்லை. அறியாமையால் ஸ்னானம் செய்துவிட்டால் பிராஜாபத்திய கிருச்சிரம் அனுஷ்டிக்கவேண்டும்.

ப்ரம்மகூர்ச்சவிதானமாய் பஞ்சகவ்ய ப்ராசனம் செய்து உபவாசமாவது இருக்கவேண்டும்- (ப்ரம்ம கூர்ச்சவிதானத்தையும், பஞ்சகவ்யப் பிராசனமுறையையும் சிஷ்டாசாரப்படி கண்டுகொள்க.) நதி முதலிய பெரிய தீர்த்தங்களிருக்கும்பொழுது ஸ்வல்ப தீர்த்தமுள்ள குளம் கிணறு முதலியவைகளில் ஸ்னானம் செய்யக்கூடாது. ஸமுத்திர ஸ்னானம் செய்வதானல் பர்வகாலங்களிற்றான் செய்யவேண்டும். அசுவத்த விருக்ஷம் (அரசமரம்) சமுத்திரம் இவைகளைத்தூர இருந்து சேவிக்கலாமேயல்லாது தொடக்கூடாது. ஆனால் அரசமரத்தைச் சனிக்கிழமையிற் றொடலாம். பர்வகாலங்களில் சமுத்திரத்தையும் ஸ்பரிசிக்கலாம். மற்ற காலங்களில் குசத்தின் நுனியாற்கூடத் தொடக்கூடாது. பல்லாயிரம் ஜன்மங்களில் எவ்வளவு பாபம் செய்திருப்பினும் லவண ஸமுத்திரத்தில் ஸ்னானம் செய்தால் அவ்வளவு பாபமுந் தொலைந்துவிடும். இந்த ஸமுத்திர ஸ்னானத்தை பத்தினி கர்ப்பிணியாயிருக்கும்பொழுது கர்ப்ப தீக்ஷையுள்ளவன் செய்யக்கூடாது. கர்ப்பதீக்ஷையுள்ளவனுக்கு—'தூரதேச யாத்திரை, க்ஷௌரம், ஸமுத்திர ஸ்னானம், பிணந்தூக்குதல்' ஆகிய இவைகள் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றன. அறியாமையாலிவைகளைச் செய்துவிட்டால் அவனுடைய வம்சத்தில் ஸந்ததி தொடர்ந்து வரமாட்டாது. சதுர்த்தசீ சம்பந்தமற்ற சுத்த பர்வங்களிலும் சனிக்கிழமை செவ்வாய்க்கிழமையாயிருந்தால் ஸந்ததியை விரும்பியவன் சமுத்திர ஸ்னானம் செய்யக்கூடாது. கிரஹணமானல் அந்தக் கிழமைகளிலும் சமுத்திரத்தில் ஸ்னானம் செய்யலாம். சதுர்த்தசி சம்பந்தமுள்ள பர்வங்களில் சதுர்த்தசியுள்ளவரை சமுத்திர ஸ்னானம் கூடாது. சதுர்த்தசி சென்றபின்பு பர்வத்திற்றான் ஸ்னானம். செவ்வாய்க்கிழமையில் சதுர்த்தசி சம

பந்தமுள்ள பர்வம் வந்தாலும் சதுர்த்தசி சென்ற பின்பு தான் பர்வத்தில் ஸ்நானம் செய்யலாம். சில ஸ்மிருதிகளில்—"செவ்வாய்க்கிழமையன்று கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி வந்தால் அதில் சமுத்திர ஸ்நானம் விசேஷமாயுள்ளது" எனக் கூறியிருப்பது பர்வசம்பந்தமில்லாத சுத்த சதுர்த்தசி விஷயமெனக் கொள்ளவேண்டும். ஸேதுவிலும், காவேரீ ஸங்கமத்திலும், கங்கா ஸங்கமத்திலும் வார தோஷம் யாதொன்றும் கவனிக்கவேண்டாம். பர்வ காலங்களில் ஸ்நானம் செய்யலாம். ஸேதுவிலானால் பர்வ காலமென்ற நியமமுமில்லை. எப்பொழுதும் ஸேதுவில் ஸ்நானம் செய்யலாம். சமுத்திர ஸ்நானத்தில் பர்வகாலங்களைத்தவிர மற்ற காலங்களை நிஷேதித்திருப்பது ஸேதுவைத் தவிர மற்றவிடங்களிலாம். அக்கினி ஹோத்திரம் செய்பவர், காராம்பசு, யாகம் செய்தவர், அரசன், ஸன்னியாஸி, சமுத்திரம் இவைகள் பார்க்கப்பட்ட மாத்திரத்தால் பரிசுத்தியை யுண்டுபண்ணுமாகையாலிவைகளைத் தினந்தோறும் தரிசிக்கவேண்டும். ஸமுத்திரத்தில் ஸ்நானம் செய்தால் அங்கு ஆசமனம் வேறு தீர்த்தத்தால் செய்யவேண்டும். ஸமுத்திர தீர்த்தத்தால் ஆசமனங் கூடாது. ஆசமனத்திற்குரிய தீர்த்தத்தைச் சொல்லுமிடத்தில் "உப்பில்லாத தீர்த்தத்தாலாசமனம்" என்றல்லவா விதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கருத்தையே தைத்திரீய சுருதியும் வெளியிடுகின்றது. ஆகையால் சமுத்திர தீர்த்தத்தாலாசமனம் கூடாது. வேறு தீர்த்தம் கொண்டுபோய் அதனாற்றான் ஆசமனம் செய்யவேண்டும். சமுத்திர தீர்த்தத்தால் தர்ப்பணம் செய்யலாமோவெனின் அது செய்யலாம். தர்ப்பணத்தை ஸமுத்திர தீர்த்தத்தால் செய்யக்கூடாதென்ற நிஷேதமில்லை. ஆகையால் சமுத்திர தீர்த்தத்தாற்றான தர்ப்பணம் செய்யவேண்டியது. சூரியன்

அஸ்தமித்தபின் நதீ ஸ்ஞனம் கூடாது. ஒரு நதியில் ஸ்ஞனம் செய்யும்பொழுது தர்ம தத்துவமறிந்தவன் மற்றோர் நதியை ஸ்துதிக்கலாகாது. அங்ஙனமே ஓர் பர்வதத்திலிருக்கும்பொழுது மற்றோர் பர்வதத்தையும், ஓர் தீர்த்தத்தில் மற்றோர் தீர்த்தத்தையும், ஓர் க்ஷேத்திரத்தில் மற்றோர் க்ஷேத்திரத்தையும் ஸ்துதிக்கலாகாது. ஸ்மரிக்கவும் கூடாது. ஸ்மரித்துவிட்டால் அவனது புண்ணியம் நசிக்கும். ஸாதாரணமான குளம், கிணறு முதலியவைகளினால் மற்ற புண்ணிய தீர்த்தங்களை ஸ்மரிக்கலாம். குருக்ஷேத்திரம், கயை, கங்கை, பிரபாச தீர்த்தம், நைமிச க்ஷேத்திரம் இதுபோன்ற புண்ணிய க்ஷேத்திர தீர்த்தங்களை ஸ்ஞன காலத்தில் ஸ்மரிக்கவேண்டும். இங்ஙனம் குளம் கிணறு முதலிய விடங்களில் கங்கை, கயை, பிரயாகம், சமுத்திர சங்கமம், சேது, இவைகளை ஸ்மரித்துக்கொண்டு ஸ்ஞனம் செய்யவேண்டும்.

## 34. ஸ்ஞனத்திற்குதவாத தீர்த்தங்கள்.

நதியைவிட்டுப்பிரிந்து மீண்டும் நதியிலேயே சேர்ந்து இங்ஙனம் போக்குவரவோடு கூடின தீர்த்தம் ஸ்ஞனத்திற்கு யோக்கியமில்லை. தாழ்ந்த ஜாதிகளின் துறையில் துவிஜாதிகள் ஸ்ஞனம் செய்யக்கூடாது. வெண்ணனுடைய துறையிலும் கூடாது. அதற்குப் பத்துமுழத்திற்கப்பால் செய்யலாம். வெண்ணனுடைய துறையில் ஸ்ஞனமும், தாசி கிருகத்தில் போஜனமும், மேற்றிசையிலும் வடதிசையிலும் தலையை வைத்துக்கொண்டு நித்திரை செய்வதும் இந்திரனுடைய ஐசுவரியத்தையும் குலைத்துவிடும். ஆகையால் வெண்ணன் துறை கூடாது. முதலையுள்ளதும், வரட்சியையுண்டுபண்ணுவதும், தாழ்ந்த ஜாதிகளின் இருப்பிடத்திற்குச்சமீபித்ததும், மயானத்திற்கருகாமையிலுள்ளதும், காவல்போட்டுத் தடுக்

கப்பட்டிருப்பதும் ஆகிய தீர்த்தம் ஸ்னானத்திற்குத் தகாது. சூத்திரனோடும், ஸ்திரீகளோடும், நாஸ்திகர்களோடும், பாஷண்டர்களோடும், சிறுவர்களோடும், ரோகிகளோடும், அசுத்தர்களோடும் ஸ்னானம் கூடாது. ஆறுகளில் முதன்மையாய் வருகிற பிரவாஹமும், கல்க்கிவிடப்பட்டதும், புண்ணிய தீர்த்தமாயில்லாததும் கூடாது. கோடைகாலங்களில் தானாகவே வற்றிப்போகின்ற ஆறுகளில் வரும் தீர்த்தம் பத்து நாளாகும்வரை ஸ்னானத்திற்குரியதல்ல. பூமியில் தேங்கிய தண்ணீரும் பத்துநாள் வரை சுத்தமில்லை. பிறகு தான் சுத்தமாகும். அப்பொழுதுதான் அதில் ஸ்னானம் செய்யலாம். வெந்நீரிலாவது அன்னியருடைய தீர்த்தத்திலாவது ஸ்னானம் செய்தால் சரீரசுத்தியாகுமேயன்றி அதிருஷ்டமான ஸ்னானபலன் கிடைக்காது. ஆகையால் வைதிகமல்லாத மந்திரங்களின் ஜபமும், சுரோத்திரியனல்லாதவனிடம் கொடுத்த தானமும் சாக்ஷி போஜனமின்றி செய்த போஜனமும் வீணாவது போல உஷ்ணோதகத்தில் (வெந்நீரில்) செய்த ஸ்னானம் வீணாகும். சில ஸ்மிருதிகளில் "தீர்த்தங்கள் இயற்கையாகவே சுத்தங்கள், அதிலும் அக்கினியாலும் காய்ச்சப்பட்டு சுத்தி பெறுமானால் அந்த உஷ்ணோதகம் சுத்த மென்பதிற்றடையுண்டோ? எப்பொழுதுமது சுத்தந்தான். ஆகையால் அந்த உஷ்ணோதக ஸ்னானத்தை அறிஞர் புகழ்கின்றனர். அக்கினியால் காய்ச்சப்பட்டது போல் வெய்யிலில் வைத்ததும் சுத்தந்தான்" என்பதாக உஷ்ணோதக ஸ்னானத்தைப்புகழ்ந்து கூறியிருப்பது ரோகிகளைப் பற்றியதாம். நதி தேவகாதம் முதலிய புண்ணிய தீர்த்தம் கிடைக்காதவரை வெந்நீரில் ஸ்னானம் செய்யலாம். ஆனால் இந்த உஷ்ணோதக ஸ்னானத்தை சங்கிராந்தி முதலிய விசேஷ காலங்களில் செய்யக்கூடாது. தீ

த்தமகப்படாவிடினும் தேடியாவது தூலதூரம் போய்த் தான் ஸ்னனம் செய்ய வேண்டும். மரணம், ஜனனம், சங்கிராந்தி, சிராத்ததினம், பிறந்த நாள், தொடக்கூடாத்தைத் தொட்ட சமயம், ஞாயிற்றுக்கிழமை, ரதசப்தமி, கிரஹணம், அமாவாஸை, பௌர்ணிமை, இக்காலங்களில் ஆரோக்கியம், ஐசுவரியம், புத்திராதி சந்தானம் இவைகளை விரும்பியவன் உஷ்ணோதகத்தில் ஸ்னனம் செய்யவேகூடாது. அப்படி செய்துவிடுவானாகில் பசுவைக்கொன்ற தோஷத்தை யடைவான். தீர்த்தமே அகப்படவில்லையானால் என் செய்வதெனில் அன்னியனுடைய தீர்த்தத்திலாவது கிணறுகளிலிருந்து எடுத்தாவது ஸ்னனம் செய்யவேண்டியதே உசிதம். சங்கிராந்திமுதலிய விசேஷ காலந்தவிர, தீர்த்தமகப்படாத மற்ற காலங்களில் உஷ்ணோதக ஸ்னனம் சேய்யநேர்ந்தால் ஓர் விசேஷமுண்டு. அதாவது—அந்த உஷ்ணோதகத்தைக் கொஞ்சம் சீதஜலமுள்ள பாத்திரத்தில்விட்டு மந்திரங்களை யுச்சரித்துக்கொண்டு மண் முதலிய ஸ்னன திரவியங்களோடு ஸ்னனம் செய்ய வேண்டும். மந்திரம் முதலியவை யில்லாமல் குளம் முதலியவற்றில் அவகாஹ ஸ்னனம் செய்யினுமது பயனற்றதே. சிவாலயத்திற்குச் சமீபித்திருக்கும் தீர்த்தம் சிவகங்கையெனவும், விஷ்ணுவின் ஆலயத்திற்குச் சமீபித்திருக்கும் தீர்த்தம் விஷ்ணு கங்கை யெனவும் கூறப்பட்டிருப்பதை யறிந்து அதில் ஸ்னனம் செய்தவன் மகா பாபங்களினின்று விடுபட்டு ஸ்வர்க்காதி லோகங்களையும் அடைவான்.

(இன்னும் வரும்.)

V. S. வேங்கடராம சாஸ்திரி.

# பக்தி.

கடல்சூழ்ந்த மேதினியில் கடவுளால் படைக்கப்பட்ட நான்குவித உற்பத்தியில் மனுஷ்யப் பிறவியே எல்லாப் பிறவியிலும் மேலான பிறவியென்றும், அப்பிறப்பினரே, "பரலோகேச்சை" பொருந்தப் பெற்றவரென்றும், அவ்வுணர்வுற்ற நம்மையே மேலான பிறப்பினரென்றும், வேதங்களும் அதன் பொருள் விரிக்கும் பல சாஸ்திரங்களும் உறுதியாய் முறையிடுகின்றன.

2. அப்பிறப்பையடைந்த நாம், அதினும், ஊமை, குருடு, தொழுநோய், அங்கக்குறை, மிகுதி, யற்று முதல் வர்ணத்தில் ஜனிப்பதரிதினுமரிது. மானிடர் பிறந்து ஐந்து வயதளவும், பாப புண்யப் பகுத்தறிவு, இல்லாத மிருகம் போல்வர்களாகவிருந்து, பிறகு காலவளவில், ஸம்ஸ்காராதிய கர்மாக்களாலும், இருட்டறையிற் கிடந்து பொருள் தெரியாது பரிதபிப்பவனுக்கு, ஒரு பெருஞ்சோதியைக் காட்டிப் பொருள் விளங்கச் செய்வதுபோல் அஞ்ஞானமாகிற இருளிற் சிக்குண்ட இச்சிறுவனுக்குக் கதிரவனெனப்ப, ஆசிரியருரைக்கும் மகா மந்திரோபதேசத்தாலும், பெற்றோர்களின் நல்லொழுக்கத்தாலும், அறிவென்னுமரவிந்தம் மலர்கின்றது. ஆதலால், சரீரம் உணவால் வளர்வதுபோல் "வானவர் மக்கள் நரகர் விலங்கு புள்ளாதி செவியறிவொடை யறிவுயிரே" எனும் நன்னூல் சூத்திரப்படி பிறவியிலுள்ள, ஐந்தறிவோடு பரலோகேச்-

சையென்னும் பகுத்தறிவும் வளர்வதாலேயே 'மக்கடாமே யாறறிவுயிரே' யெனத் தொல்காப்பியனார் சிறப்பமைத்துக் கூறினரென்க.

3. அவ்விதமுபதேசம்பெற்ற மனிதன், குருவுரைத்த மந்திரம் முதலிய கல்வியினை மறவாது, உணர்ந்து அதன் வழியொழுகி பிறழாத மனவூக்கத்தோடு, முக்காலங்களிலும் நினைவு தடுமாறாது வருபவனே! முத்தி என்னும் நிலத்துக்கு வித்தாகிறான்.

4. பல ஜன்மங்களிற் செய்த தகர வரிசை நாலைந்தினை (தீது) யொழிக்காத குறையாலிச் சென்மம் வந்ததென்றுணராதும், குருவுபதேசம் மறந்தும் கல்வியற்றும், நல்லொழுக்கமற்றும், இருப்பவர்களே, பூபாரமாயுள்ளவுயிரோடுலாவும் நடைப் பிணமாயுழல்வர் தீயோர்.

5. நன்மையுடையோர், குருவுபதேசம் மறவாமலும், கல்வி கற்றும் அதன் வழியொழுகியும் ஜீவகாருண்யத்தோடு, அரிஷட் வர்க்கங்களையறுத்து, ஈச்சுரனால் படைக்கப்பட்ட நாம், அவன் பொருளாதலின், அவனையே வழிபட்டு, மேதினியில் கடல் நீரைப் பருகிய மேகங்கள் சொறிந்த மழைகள், நதி நதங்களாயோடி யுலகிற்குதவி, பின்னும் கடலிற் சேர்ந்து ஒருருவாயமைதல்போல் இறைவனிடமிருந்திப் பூவுலகம் புகுந்த நாமும், அவ்வீசனை யடைவதற்கு முந்தள்ள மூன்று யுகங்களிற் கூறிய உபாயப்படி யிக்கலியில் மானிடர்க்கு, நரைதிரை மூப்புச் சாக்காடும், அற்பாயுளுமாகிய பெருநோய் பீடிப்பதால், அசாத்தியமாகவிருக்கிறது. ஆதலின் இக்கலியில் பிறவியை நீக்க வுளங்கை விளங்கனியென வீசனைக்கண்ட ஆசிரியர்களும், சுருதி ஸ்மிருதி புராணேதிஹாஸங்களும் கருணைகொண்டுரைத்திருக்கும் பக்தியென்ற மார்க்கமே சிறந்ததோர் மோக்ஷ மார்க்கம்.

(இன்னும் வரும்.)